# இந்துப் பண்பாட்டு மரபில் அபரக்கிரியை மரபுகளும் மாற்றங்களும் - அகோர சிவாச்சாரியார் பத்ததியை அடிப்படையாகக் கொண்டது

தி.கிருஷ்ணமூர்த்தி ஐயர்[1]

**ஆய்வுச்சுருக்கம்:**

*சிவாகமங்களின்வழி தனிநூல்களாக விளங்குவனவே பத்ததிகள் ஆகும். இவை சிவாகமங்களின்வழி கிரியைகளைச் செய்வதற்கு விளக்கமாகவும் விரிவாகவும் வழிகாட்டுவனவாகும். பதினெண் சிவாச்சாரியார்களால் பத்ததிகள் உருவாகினாலும் அவற்றுள் சோமசம்பு பத்ததி, அகோரசிவாச்சாரியார் பத்ததி இரண்டுமே பிரசித்தமானவை. சைவத்தமிழர்களால் பல நூற்றாண்டுகளாக ஆகம மரபு தவறாது எளிமையாகப் புரிந்து கிரியைகளை மனப்பதிவுடன் கிரியை செய்வதற்கு வழிகாட்டியாக உருவாக்கப்பட்டதே அகோரசிவாச்சாரியார் பத்ததி ஆகும். காலப்போக்கினையொட்டி ஆகமம் கூறும் முறைப்படியான கிரியைகளைத் தேச வழமைக்கேற்ப மாற்றியமைக்க இடம்தராது. அகோரசிவாச்சாரியார் பத்ததிவழி சிவாகம முறைப்படி அபரக்கிரியையில் முக்கியமானதாக அந்தியேட்டியானது தீட்சைக்கேற்ப சமய, விசேட, நிர்வாண அந்தியேட்டி என மூவகைப்படுகிறது. சமய தீட்சை பெற்றவரே சைவசமயி ஆவார் என்றவாறு சமயதீட்சை பெற்றவர்க்கே சமய அந்தியேட்டி இடம்பெறுதலாகும். துர்மரணமடைந்தவர்க்கு பிரேத உடலுடன் கிரியைகள் எதுவுமின்றி மௌனமாய் தகனம் செய்தலாகும். இவர்கட்கே ஆறாம் மாத நிறைவில் இறப்புத்திதியுடன் தர்ப்பையால் உருவாக்கிய "புத்தளிகை" எனும் பிரேத சரீரத்துடன் கடற்கரை மண்டபத்தில் அந்தியேட்டிக்கிரியை இடம்பெறும். துர்மரணமடைந்தவர்க்கான இம்முறையே சமயதீட்சை பெறாதவர்க்கும், பெற்றவர்க்கும் வேற்று நாளாகிய துடக்குக் கழியும் முப்பத்தியோராம் நாளில் கால மாற்றத்துடன் தேச வழமைக்கேற்ப இடம்பெறுகிறது. ஆகவே சமயதீட்சை பெறாதவர்க்கான அந்தியேட்டி மரபு மாற்றங்களில் பலன் இன்றி பாதிப்பு ஏற்படலாம். பத்ததி வழியான பாஷாணத்தாபன பூசை என்பது எட்டுச்செலவு, கல்லெடுப்பு என மாற்றமாகக் குறிப்பிடப்படுகிறது. இறந்தவருடைய ஆன்மாவைக் கல்லிலே பூசித்தல் ஆகும். துடக்குக் கழியும் மறுநாள் முதல் ஒருவருட முடிவு வரையான அபரக்கிரியைகள் பின்வருமாறு அமைகின்றன. அவையாவன, ஆசௌசம் நீங்கும் மறுநாளில் ஏகோதிட்டமும் மாதாமாதம் இடம்பெறும். சோதகும்ப சிரார்த்தமும் ஒரு வருட முடிவில் இடம்பெறும் சபிண்டீகரணமும் ஆகும். இவற்றை மட்டும் கிரியை செய்யும் கர்த்தாவிற்கு அஷம்பாவித தோஷங்கள், இடையூறுகள் ஏற்படின் ஆசௌசம் நீங்கிய மறுநாளில் ஏகோதிட்டத்துடன் இவையாவும் பொருளாதாரத்திற்கேற்ப உலோபமின்றி செய்ய விதியமைகிறது. தற்காலத்தில் விதிமரபு மாற்றமின்றி பொருத்தமான கால மாற்றத்துடன் இவை இடம்பெறுகின்றன. இந்த ஆய்வு வரலாற்று முறையியல், விபரண முறையியல் ஆகியனவற்றை உள்ளடக்கியனவாக அமைந்துள்ளது. இந்த ஆய்வின் பயனாக விதிநூல்கள் கூறும் மரபிலிருந்து சமூக வழக்காறுகள் எத்தகைய மாற்றங்களைப் பெற்றுள்ளன என்பதனைத் தெளிவுபடுத்துகிறது.*

**திறவுச்சொற்கள்:** இந்துப்பண்பாடு, அகோரசிவாச்சாரியார், அபரக்கிரியை, மரபு, பத்ததிகள்

[1]*முதுதத்துவமாணி பட்டப்படிப்பு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
karthyprinters@gmail.com

**அறிமுகம்**

இன்றைய நிலையில் அபரக்கிரியைகள் கால, தேச, வர்த்தமானத்திற்கேற்ப பல மாற்றங்களுடன் நடைபெற்றுவருகின்றன. பதினெண் பத்ததிகள், பதினெண் சிவாச்சாரியார்களால் ஆக்கப்பட்டாலும் அகோர சிவாச்சாரியார் பத்ததி வழி அமையும் அபரக்கிரியை நெறியே தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் இந்து சமயத்தவர் மத்தியிலே முக்கியத்துவம் வாய்ந்தததாக பல நூற்றாண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது (ஸ்ரீமத் அகோரசிவாச்சாரியார் பத்ததி 2008). அகோர சிவாச்சாரியார் பத்ததி இறந்தவரது பிரேத சீவனை சிவமயமாக்குதலே எனும் பண்பும் பயனுமாக கொண்ட சிவ தீட்சைகளின் அடிப்படையிலேயே அந்தியேட்டி இடம்பெறுதல் முதலிற் கவனிக்கத்தாகும்.

இறந்தோருக்கென ஆற்றப்படும் அபரக்கிரியையானது உத்தரக்கிரியை, சிரார்த்தக்கிரியை என இரு பிரிவாகவுள்ளது. இவற்றில் உத்தரக்கிரியையானது சரீரசுத்தி, ஆன்மசுத்தியென இருவகையாகும். அதாவது சரீரசுத்தி என்பது பிரேத உடலை சுத்தி செய்தலாகும். ஆன்ம சுத்தியானது ஆன்மா சிவத்துமடைவதற்காக கிரியை செய்தலாகும். ஆன்மா சுத்திக்கான கிரியைகளில் ஒன்றான அந்தியேட்டியே மிகவும் முக்கியமானதாகும் என அகோரசிவாச்சாரியார் பத்ததி கூறுகின்றது. அந்தியேட்டியானது சமய அந்தியேட்டி, விசேட அந்தியேட்டி, நிர்வாண அந்தியேட்டி என அவரவர் பெற்றுக் கொண்ட சமய, விசேட, நிர்வாணம் ஆகிய மூவகைத் தீட்சைக்கேற்ப அமைகிறது. சமயதீட்சை பெற்றவர்களே சைவ சமயியாவார்கள், என்றவாறு சமய அந்தியேட்டியானது இவர்கட்கே செய்யத்தக்கதாகும். ஆயினும் சமயதீட்சை பெறாது சைவாசாரத்தில் வழுவியவர்களுக்கே தற்காலத்தில் சமய அந்தியேட்டி கிரியை மரபு மாற்றங்களுடன் நடைபெறுகிறது. எனினும் சமய தீட்சை பெற்றவர்களிலும் மரபு மாற்றம் ஏற்படுவதுண்டு. இவை யாவற்றிலும் துர்மரணபிராயச்சித்த விதியையே கால மரபு மாற்றங்களுடன் பயன்படுத்துகிறார்கள். விசேட, நிர்வாண அந்தியேட்டி நிகழ்வுகளின் கிரியைகளில் மாற்றம் ஏற்படாது இடமாற்றம் மட்டுமே ஏற்படுகின்றது. அதாவது தீட்சைகளைப் பெற்றவர்களானவர் இயற்கையாக மரணித்தவராயின் "இறுதியாகம்" எனப்படும் அந்தியேட்டி கிரியையானது பிரேத உடலுடன் மயானத்தில் செய்யப்பட வேண்டியதாகும். இதுவே இல்லறத்தில் மரபு மாற்றத்துடன் ஆற்றப்படுகிறது.

இந்துமதம் என்பது பொதுவாக அறுசமயங்களுடனானது, அதாவது வேதங்களை ஏற்றுக் கொண்டவையாகும். இந்து மதத்தின் ஒரு பிரிவாகவே சைவசமயமும் அமைகிறது. சிவாகமமே பிரமாணமென்று கொண்டவர்களே சைவர்களெனப்படுகின்றனர். இவ்வாறான சிவாகமங்கள் ஆன்மாக்களின் மலத்தை நீக்கி வீடு பேற்றைப்பெறும் வழிகளாக குறிப்பிடுகின்றன (இந்துநெறி: 2008).

இதற்கேற்பவே உடலை விட்டு ஆன்மாவாகிய உயிர் பிரிந்தாலும் ஆன்மா அழியாதது என்பது இந்து மதத்தின் நம்பிக்கையாகும் இதற்கமையவே கர்த்தாவாகிய புத்திரன் அல்லது இரத்த உறவினரால் நன்றாக ஆற்றப்பட வேண்டிய கிரியைகளே அபரக்கிரியையாகின்றது. அபரக் கிரியைகளை ஆற்றுபவர்களையே "கர்த்தா" என அழைப்பர். அபரம் என்பது பிந்தியது எனப்பொருள்படும். "கிரியை" என்பது நன்றாகச் செய்யப்படுவது எனப்பொருள்படும். அவ்வாறானவழி இறந்தோருக்கென ஆற்றப்படவேண்டிய கிரியைகளானது தவறாது நன்றாகச் செய்யப்படுதல் வேண்டுமென இந்து சமயத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன. பிதிர் வழிபாட்டினால் பிதிர்களின் சாபம் நீங்கும்; நல்வாழ்வு கிடைக்கும் என்பதே சைவர்களின் நம்பிக்கையாகும். அதாவது பிதிர்க்கடன் செய்யாதோர் சமயாசாரம் தவறியவராவார். மேலும் பிதிர் (இறந்த ஆன்மா) வருந்தின் பெருந்தீமைகள் நமக்கு நேரும் (இந்துநெறி: 1997). இவ்வாறு அபரக்கிரியைகளின் பலனை சிவாகமங்களும் புராண இதிகாசங்களும் விளக்குகின்றன. மேலும் சிவாகம நடைமுறை மரபுக்கிரியைகளை வழிப்படுத்துவன பத்ததிகளாகும். இவ் விளக்கங்களுக்கமையவே அபரக்கிரியை மரபு மாற்றங்களின் பலன்களை உணரமுடிகிறது.

சிவாகம மரபில் பதினெண் பத்ததிகள் உருவானாலும் தென்னிந்தியா மற்றும் இலங்கை சைவசமயத்தவர்களாகிய தமிழர்களுக்கு அகோரசிவாச்சாரியார் பத்ததியே கிரியை ஆற்றுவதற்கு எளிமையான வழிகாட்டியாக அமைகிறது. ஆதலால்தான் பல நூற்றாண்டுகளாக அகோரசிவாச்சாரியாரது சிவாகம பத்ததிவழி அபரக்கிரியைகள் இடம்பெற வாய்ப்பழிப்பதாகும். எனவே சிவாகமங்கள் கூறும் முறைப்படியான கிரியைகளை அவதானித்து அவற்றை மக்கள் விளங்கிக் கொள்ளுவதேயன்றி காலப்போக்கினையொட்டி மக்கள் விளங்கும் வகையில் மாற்றியமைக்க முடியாது என்பதே விபரமாகும் (கைலாசநாதக் குருக்கள், கா., 2018). இறந்தோருக்கென தவறாது செய்யப்பட வேண்டிய கடமை என்றவழி "பிதிர்கடன்" என்றும் "பிதிர்யக்ஞ்ம்" என்றும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. பிதிர் உறையுமிடம் பித்ருலோகம் என்ற சமய நூல்வழி ஒருவன் இறந்தவுடனேயே பித்ருலோகம் சென்றடைவதில்லை. இறந்து போனவரது சீவன் ஒரு வருட பிரயாணத்தின் பின்னர்தான் பித்ருஸ்தானத்தை அடைகின்றதென்ற நம்பிக்கையிலே இந்நோக்கம் நிறைவேறும்வரை ஒரு வருட காலத்தில் அந்த ஆன்மாவின் திருப்திக்காக மாதாமாதம் பல சடங்குகள் இடம்பெறுகின்றன (கோபாலகிருஷ்ணஐயர்:1994). இவ்வாறான அபரக்கிரியையில் உத்தரக்கிரியைகளாக பேரிதாடனம், சூர்ணோத்சவம், அந்தியேட்டி, தகனம், அஸ்திசஞ்சயனம், பாஷாணத்தாபனம், பிரபூதபளி, ஏகோதிட்டம், மாசியம், சபிண்டீகரணம் போன்ற பல கிரியைகளோடு வருடாவருடம் இடம்பெறும் சிரார்த்தக் கிரியையுமாகும். இவ்வாறான அபரக்கிரியை மரபுகளில் அந்தியேட்டி கிரியையில் மரபு மாற்றங்கள் பின்வருமாறு அமைகின்றன.

சமயதீட்சை பெற்று புலாலுண்ணாது சைவசமயாசாரங்களிலும் வழுவாது இயற்கை மரணமடைந்தவர்க்கே பிரேத உடலுடன் மயானத்தில் ஆன்ம சுத்திக்கான அந்தியேட்டி யாகக் கிரியைகள் யாவும் இடம்பெறுமென அகோரசிவாச்சாரியார் பத்ததி அமைகிறது. மேலும் முன்பு

கூறியவாறு ஆன்ம சுத்திக்கான அந்தியேட்டியானது அவரவர் பெற்ற சமய, விசேட, நிர்வாண அந்தியேட்டி என மூவகையில் இடம்பெற விதியமைகிறது. சமய தீட்சை பெற்று புலாலுண்ணாது சமயாசாரங்களில் வழுவாதவதவராயினும் துர்மரணமடைந்தால் பிரேத உடலுடன் அந்தியேட்டிக் கிரியைகள் எதுவுமின்றி மௌனமாய் மயானத்தில் சிவாக்கினியால் தகனம் செய்து அகோரமந்திரத்தை ஒரு இலட்சம் தரம் ஜெபம் செய்து அரிசிமா மூலம் உருத்திர பலியிட்டு பதினொரு உருத்திரரையும், பைரவரையும் மயானத்தில் பூசித்தல் மட்டுமேயாகும். இவை மட்டுமே சமய தீட்சை அல்லாத வர்க்கும் இடம்பெறுதல் வேண்டும் (அகோரசிவாச்சாரியார்:1969). இவ்வாறு தீட்சைபெற்று துர்மரணமடைந்தவர்க்கே அகோரசிவாச்சாரியார் மரபுவழி ஆறாம்மாத நிறைவில் இறப்புத்திதியுடன் தீர்த்தக்கரை அல்லது கடற்கரை மண்டபத்தில் புத்தளிகை எனும் முப்பத்தாறு தர்ப்பை மூலம் உருவாக்கிய பிரேத ஆளுருவத்தில் மிருதக தீட்சையெனும் முப்பத்தாறு தத்துவங்களையும் நியசித்து பின்பு மயானத்தில் இடம்பெறுகின்றவாறு அந்தியேட்டிக் கிரியை யாவும் தர்ப்பையினாலான புத்தளிகையில் இடம்பெற்று முடிவில் புனர்த்தகனம் (மீள்தகனம்) செய்தலுடன் சாம்பலைத் தீர்த்தத்திலிடுதலாகிய அஸ்தி சஞ்சயனத்தையும் நிறைவேற்றுதலாகும். இவற்றுக்கே துர்மரணப் பிராயச்சித்த விதி எனப்படுகிறது. இவ்வாறு துர்மரணமடைந்தவர்க்கு அகோரசிவாச்சாரியார் ஆகம மரபுவழி ஆறாம் மாத நிறைவில் இறப்புத் திதியுடன் இடம்பெறும் அந்தியேட்டிக் கிரியை யாவும் சமயதீட்சை பெறாது சமயாசாரத்தில் வழுவியார்கட்கு துடக்குக் கழியும் முப்பத்தியோராம் நாளில் காலமாற்றத்துடன் தற்காலத்தில் இடம்பெறுகின்றது. இதனை பிராயச்சித்தமாக கருதுகிறார்கள். தீட்சைபெற்று சமயாசாரம்வழுவாது இருந்தும் துர்மரணித்தவரானவர்க்கு ஆறு மாதங்களின் முன்பு காலமாற்றத்துடன் அந்தியேட்டிக்கிரியை செய்வார்களானார் நாசமடைவார்கள் என்பது விளக்கம்.[7] இக்கட்டுப்பாட்டு விபரத்திற்கமைய தீட்சை பெறாது சமயாசாரம் வழுவியவர்களுக்கான மரபு மாற்றமான அந்தியேட்டியால் பலன் எதுவுமின்றி பாதிப்பு ஏற்படலாம். சமயாசாரம் வழுவாது துர்மரணித்தவரின் உடலும் சிதைந்திருக்குமாயின் ஒரு வருடத்தின் பின்பே அந்தியேட்டி கிரியை இடம்பெறும் எனவும் மரபு அமைகிறது.

சமயதீட்சை பெறாது சமயாசாரங்களை அனுட்டியாதவர்கள் பிசாசு வடிவத்துடன் பல நூற்றாண்டு காலம் துன்பப்படுவார்கள் என்று நூல்கள் கூறுகின்றன. ஆயினும் தீட்சை பெற்றுக்கொண்டே பின்பு சில ஆசாரங்களை அனுட்டியாது விட்ட பாபங்களை அறிந்து கொண்டு பிராயச்சித்தம் செய்வதினாலே அவை நீங்கும். அறியாது செய்யப்படும் தவறுகள், பாபங்களாயின் இறந்த பின்பு செய்யப்படும் அந்தியேட்டி முதல் சபிண்டீகரணம் வரையான கிரியைகளால் நீங்கும் (குமாரசுவாமிக்குருக்கள் 1965). ஆகவே சமய தீட்சை பெற்று இயற்கை மரணித்தவர்க்கு பிரேத உடலுடன் மயானத்தில் அந்தியேட்டி கிரியை இடம்பெறுதலே விதிக்கமைய சிறப்பானதாகும். ஆயினும் இவர்களுக்கு தற்காலத்தில் துடக்குக் கழியும் முப்பத்தியோராம் நாளில் கடற்கரை மண்டபத்தில் துர்மரணப்பிராயச்சித்த விதிக்கமைய மரபு மாற்றங்களுடன் இடம்பெறுகின்றது. மேலும் விசேட, நிர்வாண தீட்சை

பெற்றவர்களிற்கான அந்தியேட்டியானது பிரேத உடலுடன் மயானத்திற்கு பதிலாக இல்லறத்திலேயே மண்டபம் அமைத்து இட மரபு மாற்றத்துடன் இடம்பெறுகின்றது. எனினும் தற்காலத்தில் துர்மரணித்தவராயின் அவரவர் பெற்றுக்கொண்ட மூவகை தீட்சைக்கேற்ப விதிக்கமைய ஆறாம் மாத நிறைவில் இறப்புத் திதியுடன் துர்மரணப் பிராயச்சித்த விதியுடன் மரபு மாற்றமின்றி இடம்பெறுகிறது. இவ் விதியையே தீட்சை பெறாதவர்க்கும் மரபு மாற்றத்துடன் கடைப்பிடிக்கப்படுகிறது. அந்தியேட்டியானது கிரியை செயற்பாட்டில் மாற்றமின்றி அமைந்தாலும் கிரியைக்கான காலமாற்றம், இடமாற்றம், பயன்பாட்டுவிதி மாற்றம் எனவே தற்காலத்தில் இடம்பெறுகிறது.

இறந்தவருடைய ஆன்மாவை செங்கல்லிலே பூசிப்பது என்பதே பாஷாணத்தாபன பூசை எனப்படும். எட்டுச்செலவு அல்லது கல்லெடுப்பு கிரியை என்றவாறு சிவாகமங்கள், பத்ததியில் குறிப்பிடப்படாதவாறு பாஷாணத்தாபன பூசை மரபு மாற்றத்துடன் தற்காலத்தில் இடம்பெறுகிறது.

தகனம் செய்த முதல் நாள் தொடங்கி துடக்குக் கழியும் நாள்வரை வீட்டில் அல்லது வீட்டு வாசலில் செங்கல்லில் ஆன்மாவை பூசித்தலாகும். அதாவது வடக்கு முகமாக ஒரு கும்பமும் வைத்து அதன்முன் முக்கோணகுழி வேதிகையில் மடக்கை வைத்து அதன்மேல் ‘‘பாஷாணம்’’ எனப்படும். செங்கல்லை வைத்து அதில் இறந்தவரின் ஆத்மாவை ஆவாகித்து பூசித்து மூன்று பிண்டம் கொடுத்து தர்ப்பணம் செய்தல் ஆகும். இது தகனம் செய்த நாள்முதல் துடக்குக் கழியும் நாள்வரை தினமும் ஒவ்வொரு பிண்டங்களை அதிகரித்த வண்ணம் வைத்து தர்ப்பணம் செய்தலாகும் (அகோரசிவாச்சாரியார்:1969). துடக்குக்கழியும் நிறைவு நாளில் இவ்வாறான பாஷாணத்தாபன கிரியைக்காக வைக்கப்பட்டவையாகிய கூர்ச்சமிடப்பட்ட பாஷாணம் எனப்படும் செங்கல்லையும் மற்றும் கும்பபீடம் என்பவற்றையும் எடுத்து அழகாக அலங்கரித்த பல்லக்கில் வைத்து ஆடையால் மூடி சர்வாலங்காரம் செய்து தூப தீபம் காட்டி சர்வ வாத்தியங்களுடன் புண்ணிய தீர்த்தத்திற்கு அவற்றை கொண்டு சென்று இடுதல் முறையானது (அகோரசிவாச்சாரியார்:1969). ஆயினும் தேச வழமையில் நடைபெறும் கிரியையானது இறப்பு நாளுடனான ஏழாம் நாளில் அல்லது தேவை கருதி ஐந்தாம் நாளில் செய்யப்படுவதுண்டு. இறந்தவர் விரும்பியுண்ட உணவுவகையாவும் பேருணவாக கருங்கல்லிற்கு முன்படைத்து தீபங்காட்டி அவ்வுணவு வகைகளில் சிறு பகுதியை எடுத்து தீப்பந்தம், இளநீர், நீத்துக்காயுடன் வீதியிலுள்ள சந்ததியிலிடுவதாகும். மாமிசம் படைத்தலும் சில இடங்களிலுண்டு இவ்வாறான கருங்கல்லை கடலில் சாதாரணமாக துடக்குக்கழியும் நாளில் கொண்டு சென்று இடுவார்கள்.

ஆசௌசம் (துடக்கு) நீங்கிய மறுநாளில் இடம்பெறுவது இறந்த ஒருவரைக் கருதிச் செய்யப்படுவதாகிய (ஏக + உத்திட்டம்) ஏகோதிட்டமாகும். ஏகோதிட்டத்தைத் தொடர்ந்து ஒரு வருட முடிவுரை பன்னிரண்டு மாதங்களிலும் இடம்பெறும் பதினைந்து மாசிகங்களாகும். மேலும்

ஆசௌச மறுநாள் முதல் ஒருவருட முடிவுவரை தினமும் தீர்த்தம் நிறைந்த செம்போடு காய், கறி, அரிசி, தானம் வழங்கலாகிய சோதகும்ப சிரார்த்த கிரியையுமாகும். இவற்றோடு வருடமுடிவில் இறந்த திதியில் இடம்பெறுவதே சபிண்டீகரணமாகும். இவ்வாறான மரபு வழி கிரியைகளை வருட முடிவுவரை செய்பவரான கர்த்தாவிற்கு இடையூறுகள், தடங்கல்கள், அசம்பாவிதங்கள் ஏற்படுமாயின் தனது சக்திக்கியன்றவாறும், பொருளளவுக்கேற்றவாறும், அசம்பாவித தடங்கல்களுக்குரியவாறும் கிரியைகள் இடம்பெற அகோரசிவாச்சாரியார் பத்ததியானது சிவாகம விதியை வழிவகுத்துக் காட்டியுள்ளது(அகோரசிவாச்சாரியார்:1969). இதற்கேற்பவே துடக்குக் கழியும் மறுநாளில் ஏகோதிட்டத்துடன், பதினைந்து மாசிகங்களையும், சோதகும்ப சிரார்த்தத்தையும், ஒரு வருட முடிவிலான சபிண்டீகரணத்தையும் தற்காலத்தில் ஒரே நாளில் நிறைவேற்றுதலாகும். இவை மட்டுமே மரபு மாற்றமின்றி செய்தலெனப்படுகிறது. ஆயினும் தீட்சை பெறுதல் முக்கியமாகும். கிரியைகளைச் செய்யுங்கால் அதிலே அன்பும் மனப் பதிவும் அத்தியாவசியமாகும். அவையாவன ஆசௌசம் நீங்கும் மறுநாளில் ஏகோதிட்டமும் மாதா மாதம் இடம்பெறும். சோதகும்ப சிரார்த்தமும் ஒரு வருட முடிவில் இடம்பெறும் சபிண்டீகரணமும் ஆகும். மேலும் இடம்பெயர்வுடனான வெளிநாட்டவர்க்கு சபிண்டீகரணத்திற்கு சில ஆச்சாரியார் கிடைக்காதுவிடின் விசேட தீட்சை பெற்றவரை மேற்கொள்ளலாம். ஆயினும் துடக்குக்கழியும் நாள் விதியானது சமய, விசேட, நிர்வாண தீட்சைக்கேற்ப முறையே இருபத்தியோராம் நாள், பதினாறாம் நாள், பதினோராம் நாள் என்றவாறு அமைகிறது. தீட்சை பெறாதவர்க்கு முப்பத்தியோராம் நாள் துடக்குக்கழிவு என குறிப்பிடப்படவில்லை. எனவே தீட்சை பெறாதவர்க்கு துடக்கு நீங்காதது என்றவாறே இக்கருத்துநிலை அமைகிறது.

**முடிவுரை**

தொகுத்து நோக்கும் போது தற்காலத்தில் விதிமரபு மாற்றமின்றி பொருத்தமான கால மாற்றத்துடன் அபரக்கிரியைகள் இடம்பெறுகின்றன. அந்த வகையில் இந்த ஆய்வு வரலாற்று முறையியல், விபரண முறையியல் ஆகியனவற்றை உள்ளடக்கியனவாக அமைந்துள்ளது. இந்த ஆய்வின் பயனாக விதிநூல்கள் கூறும் மரபிலிருந்து சமூக நடைமுறைகள் எத்தகைய மாற்றங்களைப் பெற்றுள்ளன என்பதனைத் தெளிவுபடுத்துகிறது.

## உசாத்துணை

ஸ்ரீமத் அகோரசிவாச்சாரியார் பத்ததி, (2008) கிரியா கிரம ஜோதி (முதற்பாகம்) சிவநெறிக் கழகம், பிள்ளையார்பட்டி.

இந்துநெறி (1997), “இந்துப் பண்பாட்டின் சிறப்பியல்புகள்” யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

இந்துநெறி, (1997), ‘‘மனிதவாழ்வைச் செம்மைபடுத்தும் இல்லறக்கிரியைகள்’’, யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

கைலாசநாதக் குருக்கள், கா., (2018) சைவத் திருக்கோவிற் கிரியைநெறி, யாழ்ப்பாணம்.

கோபாலகிருஷ்ணஐயர், ப., (1994) இந்துப் பண்பாட்டு மரபுகள், வித்தியா வெளியீடு, யாழ்ப்பாணம்.

அகோரசிவாச்சாரியார் (1969) கிரியா கிரமஜோதி அபரக்கிரியா விதி.

குமாரசுவாமிக்குருக்கள், ச., (1965) சைவ சிரார்த்த விதி, அச்சுவேலி.

ஆத்ம விமோசனம் (2007) இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.